பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 24 (10—12—71) வெள்ளி   வெளியூர்: கார்த்திகை 25 (11—12—71) சனி [இதழ்: 149

எதிரியின் இழப்பு

இதுவரை கடந்த ஆறு நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு:—

விமானங்கள்	73
டாங்கிகள்	124
நாசகாரிகள்	3
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	9

டாக்கா நகரம் வீழ்ச்சியடைகிறது

இந்தியப் படைகள் சூழ்ந்துவிட்டன

தந்தித் தொடர்புகள் அறவே துண்டிப்பு--- பாகிஸ்தான் படைகள் பின்வாங்குகின்றன

புதுடில்லி, டிச. 10—

"டாக்காவையும் – அதன் சுற்றுப்புறங்களையும் இந்தியப் படைகள் சூழ்ந்து கொண்டுவிட்டன" என்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

"டாக்கா நகரம் இப்போது முற்றிலும் வெளியுலகுடன் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருந்துவருகிறது; தந்தித் தொடர்புகளும் மற்றும் ஏனைய தொடர்புகளும் முற்றிலும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

இந்தியப் படை வருகையின் இரைச்சல் மிகத் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருப்பதாக வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

முன்னணியில் இருக்கும் பாகிஸ்தான் படையினர் பின்வாங்கி ஓடிக்கொண்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வெளியுலகுடன் அறவே தொடர்பு இல்லாததனுல், டாக்காவில் பெட்ரோல் போன்ற இன்றியமையாப் பொருட்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியப் படைகள் ஹெலிகாப்டர் விமானம் மூலம் டாக்காவுக்கு குறுக்கே உள்ள நதியின் கரையில் இறங்கி டாக்காவை நோக்கி முன்னேறிக்கொண்டு வருகின்றன.

இந்தியக் கடற்படை புகுந்துவிட்டது

வங்க தேசத்தின் மங்களா துறைமுகத்தில் இந்தியக் கடற்படை புகுந்து அதைக் கைப்பற்றியிருக்கிறது.

புறநகர்ப் பகுதிகளுக்குத் தப்பித்து ஓடுகின்றனர்

இந்திய இராணுவம் வெற்றி பெறுவது உறுதி எனத்தெரிந்து கொண்ட பாகிஸ்தான் இராணுவத்தினர் டாக்காவிலிருந்து தங்களது இராணுவ உடைகளைக் களைந்து சாதாரண உடையில் நாராயணகஞ்ச் போன்ற புறநகர்ப் பகுதிகளுக்கு ஓடிக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மேற்குப் போர்முனையில்:

மேற்குப் போர்முனையில் பாகிஸ்தானுடனை எல்லா முனைகளிலும் இந்திய இராணுவம் மிக வேகமாக முன்னேறி வருகிறது.

பார்மர் எல்லையில் 210 கிலோ மீட்டர் பரப்பில் உள்ள எல்லா காவல் நிலையங்களையும் இந்தியத் துருப்புக்கள் கைப்பற்றி விட்டன; புதிதாக 6 நிலைகளையும் கைப்பற்றப்பட்டுவிட்டன.

சாம்ப் பகுதியில் 16 டாங்கிகளை இந்தியப் படைகள் அழித்தன.

பார்மர் பகுதியில் 2,250 சதுர கிலோ மீட்டர் பகுதி இப்போது இந்தியப் படைகளின் ஆதிக்கத்தில் உள்ளன.

கட்ச் பகுதியிலும் 1,000 சதுர கிலோ மீட்டர் பகுதியை நமது படைகள் பிடித்துள்ளன.

விலைவாசிகள் உயராமல் தடுக்கத் தமிழ்நாடு திட்டம்

தஞ்சை, டிச. 10—

"விலைவாசிகள் ஏறுமல் தடுப்பதற்கான ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டுத் திட்டக் குழு இறுதியாக்கியிருக்கிறது.

"மாநிலத்தின் தொழில் உற்பத்திச் சக்தியை முழு அளவில் பயன்படுத்தியும் -- பொதுமக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியில் ஒருமித்த கவனம் செலுத்தியும் சில ஆண்டுகட்கு விலை உயராமல் தடுத்து நிறுத்துவது திட்டத்தின் நோக்கமாகும்"

என்று, திட்டக் குழு உறுப்பினர் மல்கம் ஆதிசேஷையா தெரிவித்தார்.

நான்கு நடுநிலை நாடுகளின் முயற்சி

புதுடில்லி, டிச. 10—

ஆஸ்திரியா -- பின்லாந்து -- சுவீடன் -- சுவிட்சர்லாந்து ஆகிய நான்கு நடுநிலை ஐரோப்பிய நாடுகள், பாகிஸ்தான் -- இந்தியா போரில் கூட்டாகச் சமரச முயற்சியை மேற்கொள்வது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றனவாம்.

ஸ்ரீநகர் விமான நிலையம்-- 6 தடவை தாக்கப்பட்டது

புதுடில்லி, டிச 10—

ஸ்ரீநகர் விமான நிலையத்தை நேற்றிரவு எதிரி விமானங்கள் ஆறு தடவை தாக்கியதாகவும், சேதம் ஏதும் இல்லையென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மதுரைக்கு அருகில் வீழ்ந்து நொறுங்கிய இந்திய விமானம்

20 பேர் உயிரிழந்ததாகத் தகவல்

உயிர் தப்பியவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிப்பு

சென்னை, டிச. 10—

நேற்று மதியம் காணுமற்போன இந்தியப் பயணிகள் விமானம் மதுரைக்கு அருகே 140 கிலோ மீட்டர் தூரத்தில் நொறுங்கி வீழ்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது; இந்த விமானத்தில் 27 பயணிகளும் -- 4 விமானச் சிப்பந்திகளும் இருந்தனர்.

இவர்களில் 4 விமான ஊழியர்களும் -- 16 பயணிகளும் உயிரிழந்திருக்கின்றனர்.

உயிர் தப்பிய 11 பேரில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

இந்தியன் ஏர் லைன்சு நிறுவனம் தகுந்த நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

நெருக்கடியின் எதிரொலி

கூடுதல் நிதி திரட்டத் தமிழக அரசு முடிவு

முதலமைச்சர் அறிவிப்பு

அரசுச் செலவினம்--எல்லாத் துறைகளிலும் சிக்கனம் கையாளப்படும்

சென்னை, டிச. 10—

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருதி, ரூ. 3 கோடி அளவுக்குக் கூடுதல் நிதி திரட்டத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழக அமைச்சரவை எடுத்த இந்த முடிவை, இன்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.

ஒரு முழு ஆண்டில் புதிய வரி விதிப்புமூலம் ரூ. 2 கோடியும், சிறப்புப் பரிசுச் சீட்டுத் திட்டம்மூலம் ரூ. 1 கோடியும் திரட்டுவது எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதன்படி, அடுத்த மாதம் முதல் தேதிமுதல் ரூ. 1-ம் அதற்குக் குறைந்தும் கட்டணம் வசூலிக்கும் திரைப்பட டிக்கெட்டுகள்மீது 5 காசும், ஒரு ரூபாய்க்கு மேல் கட்டணம் வசூலிக்கும் திரைப்பட டிக்கெட்டுகள்மீது 10 காசு வரியும் கூடுதலாக விதிக்கப்படும்.

குதிரைப் பந்தய டிக்கெட்டுகள்மீது ரூ. 5 கட்டணத்திற்கு 50 காசுகளும் -- அதற்கு மேல் வசூலிக்கப்படும் கட்டணங்களுக்கு ரூ. 1-ம் கூடுதலாக வரி வசூலிக்கப்படும்.

மேலும், குதிரைப் பந்தய வரிமீது 5 சதவிகித மேல் வரியும் விதிக்கப்படும்.

விரைவு பஸ் கட்டணம் 4 காசுகளாகக் கூடுதலாக உயர்த்தப்படும், முத்திரைப் பத்திரங்களின் கட்டணங்களும் உயர்த்தப்படும்.

அரசாங்கச் செலவினங்களில் எல்லாத் துறைகளிலும் கடும் சிக்கனத்தைக் கடைபிடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவும் அரசு முடிவு செய்திருக்கிறது.

படி அரிசித் திட்டம் மறு பரிசீலனை

தேசிய நெருக்கடியினுல் சிக்கன நடவடிக்கையைக் கருதி, படி அரிசித் திட்டத்தை மறு பரிசீலனை செய்வது என்றும் அரசு தீர்மானித்திருக்கிறது

ஆயினும், 'ஏழை மக்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்கவேண்டிய அவசியத்தையும் அரசு உணர்ந்திருக்கிறது' என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

"அடுத்த திங்கள் முதல் நாள் முதல ரூ. 300-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்கும்வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும்" என்றும் முதலமைச்சர் உறுதி கூறினர்.

பத்திரிகை விலையை உயர்த்தும் போக்கு-கட்டுப்படுத்த முடிவு

புதுடில்லி, டிச. 10—

செய்திப் பத்திரிகை நிறுவனங்கள் தாங்கள் நினைத்தபோதெல்லாம் பத்திரிகைகளின் விலையை உயர்த்தும் போக்கைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கும் மசோதா ஒன்றைக் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

முயற்சி பயனளிக்காது!

புதுடில்லி, டிச. 10—

"இந்தியா -- பாகிஸ்தான் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், எவ்வித இராசதந்திர முயற்சியும் பயன் அளிக்காது"

என்று பிரிட்டிஷ் வெளிநாட்டுத் துறை செயலாளர் கூறினர்.

'நாட்டோ' நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் பேசுகையில் அவர், 'நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து -- உரிய நேரத்தில் தலையிட வேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.

"கடந்த 3-ம் நாளன்று இந்தியா மீது வலுத் தாக்குதல் நடத்திய பாகிஸ்தான், தனது குறிக்கோளில் ஒரு சிறிய பகுதியைக்கூட அடைய முடியாமல் நிற்கிறது"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

வலிமையை இழந்து விட்டது பாகிஸ்தான் கடற்படை

விரும்பும் இடங்களுக்கு இனி இந்தியக் கடற்படை செல்ல இயலும்

துணிச்சல்மிக்க நடவடிக்கைகளால் எதிரிக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு

புதுடில்லி, டிச. 10—

பாகிஸ்தான் கடற்படைக்கு இனி தாக்கும் வலிமை இருக்கக்கூடும் எனத் தெரியவில்லை!

எதிரியின் கடற்படை பலத்தை, இந்தியக் கடற்படை சிதைத்துவிட்டது!

இனி, கள்ளக் கடத்தல் கப்பல்களைத் தடுத்து நிறுத்துவதில் மேற்குப் பிரிவு கடற்படை அதிகக் கவனம் செலுத்தக்கூடும்.

மேற்கு முனையில் பாகிஸ்தான் கடற்படையை ஒழித்துக் கட்டுவதே இந்தியாவின் மேற்குப் பிரிவுக் கடற்படையின் நோக்கமாகும்; இந்நோக்கம் நன்கு நிறைவேற்றப் பட்டுவிட்டது; இனி இந்தியக் கடற்படை, தான் விரும்பும் இடத்திற்குச் செல்ல முடியும்.

ஒரு வாரத்தில் இரண்டாவது தடவையாக இந்தியக் கடற்படையின் மேற்குப் பிரிவு, கராச்சிக்கும் — குவடாருக்கும் இடையே மக்ரான் கரையை (பலுசிஸ்தான்) தாக்கி, எதிரியின் நான்கு கப்பல்களை மூழ்கடித்திருக்கிறது அல்லது சேதப்படுத்தியிருக்கிறது.

சுதந்தரத்துக்குப் பிறகு, இப்போதைய சண்டையில் முதல் தடவையாக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட சில மணி நேரத்துக்குள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பெரிய நீர்மூழ்கி 'காஜி' உட்பட இரண்டு எதிரி நீர்மூழ்கி (சப்மரீன்)களையும், மூன்று போர்க் கப்பல்களையும், 9 பீரங்கிப் படகுகளையும் மூழ்கடித்தன; அத்துடன் கராச்சிக்கு அருகே மேலும் 4 பாகிஸ்தான் கப்பல்களை மூழ்கடித்தன அல்லது சேதப்படுத்தின.

வடக்கு வங்காளக் குடாவில் இரண்டு பாகிஸ்தான் வர்த்தகக் கப்பல்களை கடற்படை வழிமறித்தது; அவை இப்போது இந்தியத் துறைமுகங்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

'மதுமதி' என்ற மற்றொரு பாகிஸ்தான் வர்த்தகக் கப்பலை, கடற்படையின் மேற்கத்தியத் தலைமை வழிமறித்தது; அது இப்போது பம்பாய்க்குக் கொண்டுவரப்படுகிறது.

நீர்மூழ்கியின் நோக்கம் நிர்மூலமாயிற்று

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பாகிஸ்தானின் மிகப் பெரிய சப்மரீனான 'காஜி' டிசம்பர் 3-ம் தேதி இரவு விசாகப்பட்டினம் துறைமுக எல்லையில் மூழ்கடிக்கப்பட்டது.

விசாகப்பட்டினம் கடற்படைத் தள வாயிலில் இந்திய நாசகாரிக் கப்பல் ஒன்றும் — ரோந்துக் கப்பல் ஒன்றும் ரோந்து சுற்றியபோது, நீர்மூழ்கி இருப்பது தெரிந்தது; உடனே நீருக்கடியில் தாக்கும் ஆயுதங்களை இந்தியக் கப்பல்கள் செலுத்தின; உடனே பெரிய வெடி ஓசை கேட்டது.

மூன்றும் தேதி மாலையே விசாகப்பட்டினம் அருகில் நீர்மூழ்கி இருந்தது; பாகிஸ்தானின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கு இது எடுத்துக்காட்டாகும்.

சென்னை அல்லது விசாகப்பட்டினம் அருகில் அத்தகைய முயற்சியை எதிர்பார்த்து இந்தியக் கடற்படை முன்னெச்சரிக்கையுடன் இருந்தது.

மூழ்கிய நீர்மூழ்கி பற்றிய தகவல் கொடுத்த இரு மீனவர்களுக்கு தலா ரூ. 500 வெகுமதியை வைஸ் அட்மிரல் அளித்தார்.

பாகிஸ்தான் விமானத் தாக்குதல் பற்றித் தலைமையமைச்சர் இந்திரா, டிசம்பர் 3-ந் தேதி இரவு வானொலியில் பேசிக்கொண்டிருந்தபோது நீர்மூழ்கி மூழ்கடிக்கப்பட்டது; பாகிஸ்தான் விமானங்கள் இந்திய இலக்குகளைத் தாக்கும்போது விசாகப்பட்டினம் கடற்படைத் தளத்தைத் தாக்க நீர்மூழ்கி திட்டமிட்டதுபோல் தோன்றுகிறது; அதன் நோக்கம் முறியடிக்கப்பட்டது.

1964-ல் அந்த நீர்மூழ்கியை இரவலாகப் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்தபோது, 'பயிற்சிக்காக மட்டுமே அது பயன்படுத்தப்படும்' என இந்தியாவிடம் அமெரிக்கா உறுதி கூறியது.

நீர்மூழ்கி சிப்பந்திகளின் சடலங்கள் நேற்றுதான் கண்டு பிடிக்கப்பட்டன.

வங்கக் கடலில் மற்றொரு பாகிஸ்தான் நீர்மூழ்கி மூழ்கடிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

தளவாடங்கள் ஏற்றிச் சென்ற 100 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன

ஷில்லாங், டிச. 10—

வங்காள தேசத்தில், பாகிஸ்தான் துருப்புக்களையும்—போர்க் கருவிகளையும், வெடி மருந்துகளையும் ஏற்றிச் சென்ற 100 கப்பல்கள் -- விசைப் படகுகள் -- பீரங்கிப் படகுகள் ஆகியவை -- சென்ற 24 மணி நேரத்தில் இந்தியப் படை விமானங்களின் தாக்குதல்களினால் மூழ்கடிக்கப்பட்டன.

தெற்குப் பகுதியில் குல்னா -- நாராயண்கஞ்ச் பாதையில் பைராப் ஆற்றில் சில பாகிஸ்தான் கப்பல்களையும், விசைப் படகுகளையும் இந்தியப் படை விமானங்கள் குண்டுகளை வீசி மூழ்கடித்தன.

வடக்குப் பகுதியில் பூல்சாரி-- சிராஜ்கஞ்ச் பாதையில் ஜமுனா ஆற்றில் வேறு சில பாகிஸ்தான் கப்பல்களும், விசைப் படகுகளும் மூழ்கடிக்கப்பட்டன.

எதிரிக்கு ஏற்பட்ட இழப்புப் பட்டியல்

பைராப் ஆற்றில் ஒவ்வொன்றும் 3,000 டன் எடை கொண்ட ஆறு பெரிய பாகிஸ்தான் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; அவை தவிர, 9 நடுத்தர ரகக் கப்பல்கள் -- 7 பீரங்கிப் படகுகள் -- 11 மோட்டார் படகுகள் -- பல விசைப் படகுகள் ஆகியவையும் மூழ்கடிக்கப்பட்டன.

ஜமுனா ஆற்றில் 9 பெரிய பாகிஸ்தான் கப்பல்கள் -- 5 பெரிய விசைப் படகுகள், 2 விசைப் படகுகள், 6 மோட்டார் படகுகள் ஆகியவை மூழ்கடிக்கப்பட்டன.

விமானப் படையின் அரிய சாதனை

இந்திய விமானப் படையும் -- வங்காள தேச விடுதலைப் படையின் விமானப் படைப் பிரிவும் 220 முறை தாக்குதல்களை நடத்தின.

பாகிஸ்தான் இராணுவத்தினர் தப்ப முயலும் பாதைகளை அடைக்கும் நோக்கத்துடன் இவற்றில் சரிபாதி தாக்குதல்கள் நடந்தன.

இந்திய விமானப் படையைச் சேர்ந்த வேட்டை விமானங்களும் -- 'நாட்' விமானங்களும், ராக்கெட் குண்டுகளையும் -- பிற குண்டுகளையும் வீசி இந்தக் கப்பல்களையும் -- விசைப் படகுகள் அனைத்தையும் மூழ்கடித்தன.

வங்காள தேசத்தின் வடக்குப் பகுதியில் ஜெஸ்சூர் -- குல்னா நகரங்களுக்கு இடையே பாகிஸ்தான் துருப்புகள் நதிப் படகுகளின் மூலம் தப்பி ஓட முயன்றன; இந்தியப் படை விமானங்களிடம் அந்தத் துருப்புகள் சிக்கிக்கொண்டன; தொடர்ந்து அவற்றின் மீது குண்டுகள் பொழியப்பட்டன.

பாகிஸ்தான் படையினர் இரு குழுவினராகத் துண்டிக்கப்பட்டுவிட்டனர்; இரு குழுவினரும் கடுமையான தாக்குதலுக்கு ஆளானார்கள்.

திருவண்ணாமலை இரும்புக் கனி

வெட்டியெடுக்க ஆய்வு நடத்தப்படும்

சென்னை, டிச. 9—

வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள இரும்புக் கனியை பயன்பாட்டுக்கு வெட்டி எடுப்பது குறித்து ஆராயுமாறு ஐ. நா. வளர்ச்சித் திட்டப் பிரிவை மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஐ. நா. கனி வள ஆய்வுப் பணியின் ஆய்வு மூலம், இப்பகுதியில் 14 கோடி டன் இரும்புக் கனி கிடைக்கும் என்றும், வெட்டியெடுக்கப்படும் கனியில் 40 சதவிகித இரும்புச் சத்து இருக்கும் என்றும் தெரியவந்திருக்கிறது.

இத்தகவல் இன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது தரப்பட்டது.

இது தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குத் தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள் மேலும் கூறியதாவது:—

"வட ஆற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் இரும்புக் கனி, சேலம்—கஞ்சமலை இரும்பை விடத் தோண்டி எடுப்பதற்கு மிகவும் எளிதாக இருக்கிறது; இந்த இரும்பைப் பற்றி ஜப்பானிய நிபுணர்கள் ஆராய்ந்து பார்த்துச் சென்றுள்ளனர்; இந்த இரும்புக் கனியை வெட்டி எடுத்துச் சிறு சிறு குண்டுகளாக உருக்கி ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அதுபற்றி மேலும் ஆராய நிபுணர்கள் வர இருக்கிறார்கள்; அந்த இடத்தில் ஒரு சிறிய இரும்புத் தொழிற்சாலை தொடங்கலாமா என்பதை இந்த அரசு பரிசீலித்து வருகிறது.

அனந்தநாயகி (சிண்டிகேட்):— "இரும்புக் கனிப் பொருள் வட ஆற்காடு மாவட்டத்தில் நிறைய கிடைக்கும் என்று தெரிவதாலும் இதற்கான தொழிற்சாலை தொடங்குவதில் தாமதமாகக் கூடும் என்று கருதப்படுவதாலும், முதலில் இந்த இரும்பைத் தோண்டியெடுத்துத் தொழிற்சாலை அமைக்கும் வேலையைத் தனி நபரிடம் விட்டுவிட்டுப் பிறகு தேசியமயமாக்கிக் கொள்ளலாமே; இப்படிச் செய்வதன் மூலம் உடனடியாக நிறைய பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் அல்லவா?"

அமைச்சர் செ. மாதவன்:— "இதற்கான இரும்புத் தொழிற்சாலையைத் தனி நபரிடம் விட வேண்டுமென்று உறுப்பினர் சொல்லும் யோசனையைப் பார்த்து, அவர் கட்சியைச் சேர்ந்த ஒருவரே தலையில் அடித்துக் கொள்வதை நான் காண்கிறேன்; இந்த இரும்புத் தொழிற்சாலையைத்தனியாரிடம் கொடுப்பதற்கு இல்லை."

டி. என். அனந்தநாயகி:—"நான் ஒன்றும் தனியாரிடம் கொடுக்கும்படி கூறவில்லை; 'அரசாங்கம் தொடங்குவதில் உள்ள தாமதத்தைக் கருதி, தனியாரைத் தொடங்கச் செய்து-பின்னர் அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம்—நிறைய வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதற்காகச் சொன்னேன்."

முதலமைச்சர் (குறுக்கிட்டு):— "தனி நபர் ஒருவர் இரும்புத் தொழிற்சாலையைத் தொடங்கும்படி செய்துவிட்டுப் பின்பு திடீரென்று 'தேசியமயமாக்கப் போகிறோம்' என்று சொன்னால் எந்தத் தனி நபரும் தொழிற்சாலையைத் தொடங்க முன்வர மாட்டார்."

தீவுத் திடலில் கட்டடம்

தடுத்து நிறுத்தும் பிரச்சினை பற்றி முதலமைச்சர்

சட்டமன்ற கேள்விகளுக்கு அமைச்சர் ப. உ. ச. பதில்

சென்னை, டிச. 10—

சென்னை நகரிலுள்ள தீவுத் திடலில் மத்திய அரசு கட்ட இருப்பதாகக் கூறப்படும் கட்டடப் பிரச்சினை பற்றித் தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் ப. உ. சண்முகம் அளித்த பதில்களும் வருமாறு:—

துரைசாமி (தி.மு.க.):— "சென்னை நகரத்தில் உள்ள தீவுத் திடலில் மத்திய அரசு கட்டடம் கட்டுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?"

அமைச்சர்:— "கட்டடம் கட்டுவதை நிறுத்தும்படி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்."

பரந்தாமன் (தி.மு.க.):— "தீவுத் திடலை மாநில அரசுக்குக் கொடுத்துவிடும்படி கேட்கப்படுமா?"

அமைச்சர்:— "அம்மாதிரி கேட்கவில்லை; அதில் கட்டடம் கட்டுவதை நிறுத்தும்படி எழுதியிருக்கிறோம்."

சே. எம். சுப்பிரமணியம் (சிண்டிகேட்):— "சென்னை நகரத்தில் மாநில அரசு கட்டடம் கட்டும்போது சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற வேண்டும் என்று விதி இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த விதியை மீறி மாநில அரசு கட்டடம் கட்டுகிறதா?"

அமைச்சர்:— "அரசாங்கக் கட்டடங்களுக்கு அந்த மாதிரி விதி இருப்பதாக நினைவு இல்லை.

எச். வி. ஹண்டே (சுதந்தரா):— "தீவுத் திடலில் மத்திய அரசு கட்டடம் கட்டுவதை நிறுத்தியிருப்பதாக கூறப்பட்டதே— ஆனால் அவர்கள் கட்டட வேலையைத் தொடங்கிவிட்டார்களே?"

அமைச்சர்:— 'அது பற்றி அரசின் கவனத்திற்கு வந்தது; மறுபடியும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்--பதில் வரவில்லை."

முதலமைச்சர் (குறுக்கிட்டு):— "தீவுத் திடலில் கட்டடம் கட்ட வேண்டாம் என்று கடிதம்மூலம் எழுதியது மட்டும் அல்லாமல் நேரிலும் சம்பந்தப்பட்டவர்களை சந்தித்துக் கூறியிருக்கிறோம்; அவர்களும், 'கட்டடம் கட்டுவது நிச்சயம் நிறுத்தப்படும்' என்று கூறியிருக்கிறார்கள். உறுப்பினர் ஹண்டே கூறிய தகவல் புதிதாக இருக்கிறது; அதுபற்றி மேலும் இந்த அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்."

புதுக்கோட்டையில் வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

சென்னை, டிச. 9—

"ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் புதுக்கோட்டையில் செயல்படுத்தப்படவிருக்கிறது; ஏற்கனவே இத்திட்டம் நெல்லை மாவட்டம் கோவில்பட்டியில் செயல்படுத்தப்பட்டுவருகிறது" என்று சட்டப் பேரவையில் தகவல் தரப்பட்டது.

போர்ச் சேதங்களுக்கு இழப்பு ஈடு

தொழிற்சாலைகளுக்கு வழங்கச் சட்டம்

புதுடில்லி, டிச. 9—

குண்டு வீச்சில் தொழிற்சாலைகளுக்குச் சேதம் ஏற்பட்டால் அதற்கு இழப்பு ஈடு கொடுக்கும் வகைசெய்யும் சட்டம், நிறைவேற்றப்பட்டது.

அவசர நிலைமையைக் கருதி தொழிற்சாலைகளுக்கும் -- சரக்குகளுக்கும் இன்சூரன்சுப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், இரண்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

இதற்கான மசோதாக்களை, நிதியமைச்சர் சவான் நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

எதிரி நாட்டின் குண்டு வீச்சில் சேதம் அடைந்தாலோ, அல்லது எரிந்து போனாலோ, அதற்கு மத்திய அரசு இழப்பு ஈடுகொடுக்கும்; இன்சூர் செய்திருக்கும் சொத்தின் மதிப்பில் 30 சதவீதம் பணம் கொடுக்கப்படும்.

இதற்கான ஓராண்டுப் 'பிரிமியம்' தொகை, இன்சூர் செய்யப்பட்ட பணத்தின் மதிப்பில் 3 சதவீதமாகும்.

ரூ. 50,000-மேற்பட்ட தொழிற்சாலைச் சொத்துக்களுக்கு இந்த இன்சூரன்சுத் திட்டம் கட்டாயமாகவும் அதற்குக் குறைந்த மதிப்புள்ள சொத்துக்களுக்கு விரும்ப அடிப்படையிலும் இருக்கும்.

நாட்டுப் பாதுகாப்பு:

அண்ணா சொல் கேளீர்!

"இந்தப் போராட்டம் இரு நாடுகளுக்கிடையே நடப்பதல்ல; சனநாயகத்துக்கும் -- சர்வாதிகாரத்துக்கும் நடக்கும் தத்துவப் போராட்டமாகும்.

சனநாயகம் என்றுமே தோற்றதில்லை! சர்வாதிகாரம் என்றுமே வென்றதில்லை!

சனநாயகம் சிரித்த முகத்தோடு இருக்கும்-- ஆரம்பச் சூரத்தனம் அதனிடத்திலே இருக்காது; எனினும், அது ஆழ்ந்த ஆறு போன்றதாகும்; அதில் ஆழம் தெரியாது -- இறங்கினால் அழுந்திப் போவார்கள்!

சனநாயகத்துக்குத் தாங்கும் சக்தியும் உண்டு -- தாக்கும் சக்தியும் உண்டு. அதை இட்லர் கண்டுவிட்டான்!

நாசிசத்திற்கு முதலில் வெற்றிமேல் வெற்றி கிடைத்தபோதிலும், சனநாயகம்தான் இறுதி வெற்றி பெற்றது!

அப்போது பிரிட்டிஷ் தலைமையமைச்சராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், 'இங்கிலாந்தும் பிடிபட்டுவிட்டால், விண்ணில் இருந்தேனும் -- கடலில் இருந்தேனும் அல்லது வேறு நமக்குச் சொந்தமான நாடுகளிலிருந்தேனும் போரிடுவோம்' என்று வீர உணர்ச்சியோடு முழங்கினார்!

"அந்த வீர உணர்வு நமக்கு வேண்டும்; 'இறுதி வெற்றி நமக்கே' என்ற உறுதியான நம்பிக்கை வேண்டும்; அந்த வெற்றியைப் பெற அனைவரும் தோளுரைத்துக் கொள்ளவேண்டும்."

—(சீனப் படையெடுப்பின்போது பேசியது)

1.65 கோடியைத் தாண்டியது

வங்க தேச அகதிகளின் வருகை அதிகரிப்பு

கல்கத்தா, டிச. 9—

வங்காள தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 1.65 கோடியைத் தாண்டிவிட்டதாகக் கடைசியாக கிடைத்துள்ள கணக்கெடுப்பிலிருந்து தெரியவந்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் ஒரு நாளைக்கு சராசரி 8,000 பேர் வந்துள்ளனர்.

எல்லை மாநிலங்களான மேற்கு வங்காளம், திரிபுரா, மேகலாயா, அசாம், பீகாரில் உள்ள 872 முகாம்களில் மட்டும் ஏறத்தாழ 61 இலட்சம் பேர் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தி. மு. க. தலைமைச் செயற்குழு

அவசரக் கூட்டம்

12-12-71 ஞாயிறு அன்று சென்னையில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுவின் அவசரக் கூட்டம், 12—12—71 ஞாயிறு காலை 10-மணிக்கு சென்னை — அண்ணா சாலை சட்டமன்ற தி. மு. க. கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் தலைமையில் நடைபெறும்; அதுபோது, 'பாகிஸ்தான் படையெடுப்பும் நமது கடமையும்' என்ற பொருள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

'அறிவகம்' சென்னை-13 6-12-1971

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

மத்திய அரசு ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப் படி

சேமிப்புக் கணக்கில் சேர்ப்பது பற்றி ஆய்வு

புதுடில்லி, டிச. 9—

வாழ்க்கைச் செலவுகள் அதிகமாகியுள்ளதால், ஊழியர்கட்குக் கூடுதல் அகவிலைப் படி அளிக்க வேண்டுமென மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது தெரிந்ததே; ஆனால், 'இந்தக் கூடுதல் படியை உடனடியாக ரொக்கமாக அளிக்கவேண்டுமென ஊழியர்கள் வற்புறுத்தக் கூடாது' என்று அரசு கோரக் கூடும்.

1962-ம் ஆண்டில், சீனப் படையெடுப்பின்போது நாட்டில் நெருக்கடி நிலையை அனுசரித்து ஊழியர்களின் கூடுதல் கிராக்கிப் படி ரொக்கமாக அளிக்கப்படாமல் அவர்களது சேமிப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டது; அவ்வாறே இப்போதும் செய்யலாம் என்று ஊதியக் குழு யோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது.

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, ஊழியர்கள் ரூ 8 முதல் ரூ. 20 வரை கூடுதல் அகவிலைப் படி பெறுகிறார்கள்; இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி செலவு பிடிக்கும்.

தற்போதைய நெருக்கடி நிலையை அனுசரித்து செப்டம்பர் முதல் நாளிலிருந்து டிசம்பர் முதல் நாள் வரையிலான கூடுதல் தொகைகளை ஊழியர்கள் சேமிப்புக் கணக்கில் சேர்த்துக் கொள்ள ஊதியக் குழு யோசனை கூறியுள்ளதாக நம்பப்படுகிறது.

ஆனால், 'ரொக்கமாகவே தர வேண்டுமென ஊழியர்களின் பிரதிநிதிகள் வற்புறுத்தினால், இந்தப் பிரச்சினையை அரசு ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதாது' என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

டில்லி ஆசிரியர்களுக்குத் தர வேண்டிய கூடுதல் தொகைகளை வங்க தேச நெருக்கடி நிலைமை தீர்ந்த பிறகு அவர்களுக்கு அளிக்கலாம் -- என்று மேற்படி ஆசிரியர்களின் ஒப்புதலுடன் அரசு முடிவு செய்ததை அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

நிக்சனின் போக்கு— ஹம்ப்ரி வருத்தம்

புதுடில்லி, டிச. 9—

அமெரிக்காவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர்—திரு. ஹம்ப்ரி, இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கியிருப்பது குறித்து வருத்தம் தெரிவித்தார்.

"இந்தியா -- பாகிஸ்தான் பூசலில் அமெரிக்கா விலகியிருந்திருக்க வேண்டும்" என்று அவர் கருத்தறிவித்தார்.

புதுடில்லியில் வங்காள தேசக் கொடி

புதிய தூதரகத்தில் ஏற்றப்பட்டது

சென்னை, டிச. 9—

வங்காள தேசத்தின் தூதுவரகம் இன்று புதுடில்லியில் இயங்கத் துவங்கியது.

வங்காள தேசத் தூதுவரான சௌத்ரி, வங்காள தேசக் கொடியை ஏற்றிவைத்தார்.

பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று வங்காள தேசீயகீதம் பாடியது.

போலீசு வாத்தியக் குழுவினர் வாதியம் வாசித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் திரளான மக்கள் வந்து குழுமியிருந்து கொடியேற்றும்போது மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

வங்காள தேச அரசின் செய்தி

வங்காள தேச தற்காலிகத் தலைமையமைச்சரான திரு. தாசுதீன் அகம்மது, அனுப்பியிருந்த செய்தியில் வங்காள தேசத்தை விடுவிக்க வந்திருக்கும் இந்தியப் படைக்கு வங்காள மக்கள் உற்சாகத்துடன் வரவேற்பு அளிப்பதாகக் கூறியுள்ளார்; வங்காள தேசத்தை அங்கீகரித்ததற்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

சிற்றுளி சுப்பிரமணியம் இறுதிப் பயணம்

அமைச்சர் க. இராசாராம் மற்றும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

சேலம், டிச. 7—

6—12—71-ஆம் நாள் காலை 6-மணிக்கு சிற்றுளி சுப்பிரமணியம் இயற்கையெய்தினார் என்ற செய்தி நகரத்தில் காட்டுத் தீ போல் பரவியதும் திரளான மக்கள் கூடி கண்ணீர் விட்டனர்.

போக்குவரத்து நிலைநின்று விட்டதால் சின்னக் கடைத் தெரு போக்குவரத்தை இரண்டாவது அக்கிரகாரத்தின் பாதை வழியாகக் காவல் துறையினர் திருப்பிவிட்டனர்.

சின்னக் கடைவீதி இரண்டாவது அக்கிரகாரம் வியாபாரிகள், மறைந்த தோழருக்குத் தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவிக்கும் வகையில் கடையடைப்புச் செய்தனர்.

கழக நகரமன்ற உறுப்பினர்களும் —தோழமைக் கட்சி உறுப்பினர்களும் மாலையணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

பூ வியாபாரிகள் சங்கம், ஆட்டோ ரிக்ஷா சங்கம், எம். ஜி. ஆர். மன்றங்கள், மற்றும்பல அமைப்புகள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர்கள் கே. செயராமன், எஸ். ஆறுமுகம் இருவரும் சென்னையிலிருந்து விரைந்துவந்து சிற்றுளி சுப்பிரமணியத்தின் உடலைப் பார்த்துக் கண்ணீர் விட்டனர்; மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்து இறுதி வணக்கம் செலுத்தினர்.

அன்று இரவு சவ ஊர்வலம் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டு அமைச்சர் க. இராசாராம் அவர்களின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்; அவர் வந்து சேர்ந்ததும் அலங்காரப் பல்லக்கில் சிற்றுளி சுப்பிரமணியத்தின் உடலைப் பார்த்துக் கண்ணீர் விட்டார்; மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின், ஊர்வலம் சின்னக்கடை வீதியிலிருந்து புறப்பட்டு பெரிய கடை வீதி அண்ணா சிலை வழியாக முதல் -- இரண்டாவது அக்கிரகாரம் சென்று இடுகாட்டை அடைந்தது.

ஊர்வலத்தில் அமைச்சர் க. இராசாராம் சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர், நகராட்சி உறுப்பினர்கள், மற்றும் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

இடுகாட்டில் இரங்கல் கூட்டம் அமைச்சர் க. இராசாராம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; அவர் பேசுகையில், தமிழகத்தில் உள்ள சிறந்த பேச்சாளர்களில் சிற்றுளி சுப்பிரமணியமும் ஒருவர் என்றும், தொடக்கக் காலத்திலிருந்தே கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் என்றும், அவர் குடும்பத்திற்குக் கழகத் தோழர்கள் தாராளமாக உதவவேண்டும் என்றும் கூறினார்; மற்றும் பலர் பேசினர்.

மறைவு

திருச்சி—லால்குடி வட்டம் இராமநாதபுரம் தி. மு. க. கிளையின் நீண்டநாள் உறுப்பினரும், எம். ஜி. ஆர். மன்ற அமைப்பாளருமான ஆர். சி. முத்துச்சாமி, 7—12—71 காலை இயற்கையெய்தினார் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது; கிளைக் கழகச் சார்பில் ஆர். கே. குருசாமி இரங்கல் தெரிவித்துக் கொள்கிறார்.

வெளியே வர வெட்கம்

எதிரி விமானப் படையின் திட்டத்தில் திடீர் மாற்றம்

மற்றொரு பெரும் தாக்குதலில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படுவதற்கு இனி இடமில்லை

புதுடில்லி, டிச. 10—

தோல்விமேல் தோல்வியைத் தழுவிக்கொண்டு வரும் பாகிஸ்தான் விமானப் படை, இப்போது வெளிவருவதற்கே மிகவும் வெட்கப்படுகிறது.

இந்தியாவைத் தாக்குவதற்கு ஏதாவது திட்டமிட்டாலும், அத்தாக்குதல், இரவு நேரங்களிலேயே நடத்தப்படுகிறது.

விமானப்படை நிலைமை குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கமளித்த இந்திய விமானப் படை மேற்குப் பகுதி தளபதி எம். எம். எஞ்சினீயர், 'இதுவரையில் பாகிஸ்தானின் தாக்குதலால் நமது ஒரு விமானத்தைக்கூடத் தரையில் நாசப்படுத்த முடியவில்லை' என்று பெருமையுடன் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மிக விரைவில், பாகிஸ்தான் விமானப் படை, தன்னைத் தற்காத்துக் கொள்ளும் அளவுக்குத் தனது நடவடிக்கைகளைச் சுருக்கிக் கொள்ளக்கூடும்; இந்த நிலைமை, அதற்குத் தவிர்க்கக் கூடாததாகும்.

"ஏற்கனவே எதிரிகளின் பல விமானங்கள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன."

"பாகிஸ்தான் விமானப் படை இன்னும் ஒரு புதிய பெரும் தாக்குதலில் ஈடுபடுமா?"

என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, 'இது சாத்தியமில்லை என்றே கருதுகிறேன்' என்று குறிப்பிட்ட அவர், இத்தொடர்பில் மேலும் கூறியதாவது :—

"இப்போது அவர்கள் வைத்திருக்கும் விமானங்களுடன் அவர்கள் அப்படிச் செய்ய முடியாது.

"ஒருவேளை, வேறு எங்கிருந்தாவது அவர்கள் புதிய விமானங்களைப் பெற முடியுமானால், அது உயர்தர விமானங்களாகத்தான் இருக்கும்; அதற்குத் தகுந்த பராமரிப்பும் — துணைப் பொருட்களும் தேவை; அதை வழங்கும் முறையில் பாகிஸ்தான் இப்போது இல்லை; ஆகவே, புதிய பெரும் தாக்குதல் பெரும்பாலும் சாத்தியமிராது என்றே கருதுகிறேன்."

எகிப்தின் முன்னாள் துணை அதிபருக்கு ஆயுட் காலத் தண்டனை

முன்னாள் அமைச்சர்களுக்கும் கடுங்காவல் தண்டனை

கெய்ரோ, டிச. 10—

எகிப்து நாட்டின் அதிபர் அன்வர் சதாத்துக்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் துணை அதிபர் அலி சாப்ரிக்கு ஆயுட் காலக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இரு முன்னாள் அமைச்சர்களான சமி ஷராப், ஷாராவி முகம்மது கோமா ஆகியோருக்கும் அதே குற்றம் செய்ததாக ஆயுட் காலக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

முன்னாள் தகவல் துறை அமைச்சர் முகம்மது பாயகி, பத்து ஆண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

முன்னாள் குடியிருப்பு வசதி அமைச்சர் சாத் சையதுக்கு ஐந்தாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

முன்னாள் போக்குவரத்து அமைச்சர் அவிஜின் எல் அப் தீன் விடுதலை செய்யப்பட்டார்.

பாகிஸ்தானின் புரளிப் பிரசாரம்

வெளிநாட்டு நிருபர்கள் மறுப்பு

புதுடில்லி, டிச. 9—

இந்திய விமானிகள் சிவிலியன் விமானத் தளங்களையும் தாக்குவதாகப் பாகிஸ்தான் செய்துவரும் புரளிப் பிரச்சாரம் தவறானது என்பதை, வெளிநாட்டு நிருபர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

விமானத் தாக்குதல்கள் நடைபெறும்போது நகர மக்கள் வீட்டின் கூரைமீது ஏறி வேடிக்கை பார்ப்பதே, ஒரு சான்றாகும் என்றும், மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும், இந்திய விமானிகள் முன்னெச்சரிக்கையில்லாமல் செயல்படுவதாகக் கூறுவதும் தவறு என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

புறமுதுக்கிட்டோடும் பகைவர்கள்

ஏராளமான ஆயுதங்களை விட்டுச் செல்கின்றனர்

கல்கத்தா, டிச. 10—

கிழக்கு வங்கத்தில் புறமுதுகிட்டோடும் பாகிஸ்தான் இராணுவம் ஏராளமான வெடிமருந்துகளையும் — ஆயுதங்களையும் விட்டுச் சென்றிருக்கின்றன.

ஜெஸ்சூரில் சுமார் 6,000 டன் வெடிமருந்துகள் விட்டுச்சென்றிருக்கின்றனர்.

ஜெண்டா பகுதியில் 1,500 டன்களும், மொகுராவில் 300 டன்களும் விட்டுச் சென்றிருக்கின்றனர்.

மேலும் பலதரப்பட்ட ஆயுதங்களும் ஜெஸ்சூர் பகுதியில் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

பீதியடைந்து ஓட்டம் பிடித்த பாகிஸ்தான் துருப்புக்கள் தரைப்படை அறையைக்கூட அப்படியே விட்டுச் சென்றிருக்கின்றனவாம்.

நடமாடும் நீதிமன்றம்

மதுரையிலும் ஏற்படும்

சென்னை, டிச. 9—

"இடம் மாறும் நீதிமன்றம் ஒன்றை மதுரையில் துவங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

"திருநெல்வேலியிலும் இதே போன்று ஒரு நீதிமன்றத்தை அமைக்கப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது"

என்று சட்டப் பேரவையில் சட்ட அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

12--12--71

அம்மன்புரம்

தி. மு. க. துவக்க விழா — சட்டமன்ற உறுப்பினர் கே. பி. கந்தசாமி அவர்களுக்குப் பாராட்டு; இரவு 7 மணிக்கு; தலைவர் : கே. டி. கணேசன்; பேசுவோர் : கே. பி. கந்தசாமி எம்.எல்.ஏ., பொ. கண்ணபிரான், கோ. இம்மானுவேல், ஆ. செல்லத்துரை, இரா. நல்லினவேல், அ. மூர்த்தி, திரு. லி. சந்திரன் — துரைராசன் — ஜெயந்தி கலைநிகழ்ச்சி நடைபெறும்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைமைச் செயற்குழு அவசரக் கூட்டம்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைமைச் செயற் குழு அவசரக் கூட்டம் 12-12-71 பிற்பகல் 3-மணியளவில், சென்னை — தேனாம்பேட்டை 'அன்பகத்'தில் பேரவைத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி., அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது, 'பாகிஸ்தான் படையெடுப்பும்—நமது கடமையும்' என்பது பற்றிய பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றக் கூட்டம், 11—12—71 மாலை 6 மணிக்கு, சென்னை — எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ.-வில் நடைபெறும்; பங்கு பெறுவோர் : முத்தமிழ்க் காவலர் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம்; தலைவர் : டாக்டர் ந. சஞ்சீவி (தமிழ்ப் பேராசிரியர் சென்னைப் பல்கலைக் கழகம்); பொருள் : காலஞ்சென்ற தமிழறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் நூற்றாண்டு விழா.

ஆவடி டாங்கிகளின் அரிய சாதனை

சீக்கியத் தளபதி பெருமிதம்

சியால்கோட், டிச. 10—

ஆவடியில் தயாரான 'வைஜயந்தா' டாங்கிகள், அக்னூர் போர் முனையில் எதிரிகளுக்குப் பெரும் நாசத்தை விளைவித்தன.

ஆவடித் தொழிற்சாலையிலிருந்து புதிதாக வெளிவந்த இந்த டாங்கிகள் தொடக்கத்திலேயே அரிய சாதனைகளை ஏற்படுத்தியது.

'வைஜயந்தா' டாங்கிகளின் உதவியுடன் இந்தியக் காலாட் படை 36 மணி நேரத்துக்குள் 'கோழிக் குஞ்சுவின் கழுத்து' போன்ற அப்பகுதி முழுவதையும் பிடித்துவிட்டது.

'வைஜயந்தா' டாங்கிகளின் சாதனை பெருமைக்குரியதாகும்— என்று டாங்கிப் படையின் 24 வயது சீக்கிய தளபதி கூறினார்; 'இந்த டாங்கிகள் குறித்து நாங்கள் பெருமிதமடைகிறோம்' என்றார் அவர்.

ராலப் பூஞ்சே மறைவு

நியூயார்க், டிச. 10—

ஐக்கிய நாட்டுப் பேரவையின் முன்னாள் துணைப் பொதுச்செயலாளரும்—நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் ராலப் பூஞ்சே, நியூயார்க்கிலுள்ள மருத்துவமனை ஒன்றில் இயற்கையெய்தினார்.

டாக்டர் பூஞ்சேவுக்கு வயது 67; பல மாதங்களாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்; கண் பார்வையை முற்றிலும் இழந்துவிட்டிருந்தார்; சிறுநீரகக் கோளாறு — மார்பு நோய் — நீரிழிவு வியாதி ஆகியவற்றால் அவர் பாதிக்கப்பட்டிருந்தார்.

தப்பிச் செல்வதற்கு எதிரிகளால் இயலாது

வங்காள தேசத்தில் எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன

புதுடில்லி, டிச. 10—

வங்க தேசத்தில் முன்னேறிக் கொண்டு வரும் இந்திய இராணுவம், எதிரித் துருப்புக்கள் தப்பிச் செல்ல முடியாதபடி எல்லாச் சுற்று வழிகளையும் அடைத்துவிட்டது.

கடைசியாகக் கிடைத்த தகவல்படி, இந்தியத் துருப்புக்கள் டாக்காவை நெருங்க இன்னும் எட்டு கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது.

டாக்கா பின்புற நகர்ப் பகுதியும் — தொழில் நகரமுமான நாராயண்கஞ்சை இந்திய இராணுவம் பிடித்துவிட்டது.

டாக்காவுக்குள் நுழைய இன்னும் ஒரு சிறிய ஆற்றை மட்டுமே கடக்க வேண்டியிருக்கிறது.

மேற்கு முனையில் பொதுவாகப் போர் நிலை கடந்த இரண்டு நாட்களாக மந்தமாகவே இருந்துவருவதாகக் கூறப்படுகிறது.

சாம்ப் பகுதியில் எதிரிகள் ஓட்டம்

சாம்ப் பகுதியில் நமது ஒரே ஒரு சாவடியைக் கைப்பற்றியிருந்த எதிரிகளை நமது துருப்புக்கள் துரத்தியிருக்கின்றனர்.

இனிமேல் இந்தப் பகுதியில் எதிரி நெருங்க முடியாதபடி, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டதாகத் தளபதி காண்டத் தெரிவித்தார்.

ஏனைய எல்லாப் பகுதிகளிலும் இந்தியத் துருப்புக்கள் கணிசமாக முன்னேறிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

டெலிபிரிண்டர் தொழிற்சாலை வேலைநிறுத்தம்

'சட்ட விரோதம்' என மத்திய அரசு அறிவிப்பு

சென்னை, டிச. 10—

சென்னை—கிண்டியிலுள்ள மத்திய அரசின் நிறுவனமான 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' தொழிற்சாலைத் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காகக் கடந்த 8-ந்தேதி முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசு இந்த வேலைநிறுத்தத்தைத் தடை செய்திருக்கிறது; இவ்வுத்தரவு, உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

"இத்தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் செய்வது, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சட்ட விரோதமாகக் கருதப்படும்" என்று மத்திய அரசின் அறிக்கை கூறியிருக்கிறது.

இதைத் தொடர்ந்து, 'வேலைநிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்கள், உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும்' என்று அந்நிறுவனத்தினர் விடுத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எழுத்து வடிவில் செய்தி அனுப்பப் பயன்படுவது, 'டெலிபிரிண்டர்' கருவியாகும்.

இராணுவச் செய்திகளை அனுப்புவதற்காக இராணுவத் துறையில் நிறைய டெலிபிரிண்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இப்போது போர் நடப்பதால், 'டெலிபிரிண்டர் தொழிற்சாலையில் உற்பத்தித் தொடர்ந்து நடப்பது அவசியம்' என்று மத்திய அரசு கருதுகிறது.

வெளிநாட்டுக் குடிமக்கள் வெளியேறுகின்றனர்

24 மணி நேரம் விமானத் தாக்குதல் இல்லை — இந்தியா செய்த முடிவு

புதுடில்லி, டிச. 9—

பாகிஸ்தானிலுள்ள வெளிநாட்டுக் குடிமக்கள் பாதுகாப்பாக வெளியேறும்பொருட்டு 24 மணி நேரம் விமானத் தாக்குதல்களை நடத்துவதில்லை என்று இந்தியா முடிவு செய்திருக்கிறது.

நேற்று கராச்சியிலிருந்து 500 பேர் வெளியேறியிருக்கின்றனர்.

"இன்னும் நீண்ட நாள் இந்தியாவுடனான போரில் பாகிஸ்தான் தாக்குப் பிடிக்காது" என்றே மேல்நாட்டு தூதுவர்கள் கருதுகின்றனர்.

கராச்சி சிவில் விமானத் தளத்தை இந்தியா தாக்காது என்று இந்தியா அறிவித்திருப்பதைப் பயன்படுத்தி, சில நாடுகள் இராணுவத் தளவாடங்களை அங்கு கொண்டுவருவதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளி மாலை 6 மணியிலிருந்து 24 மணி நேரம் டாக்கா சிவில் விமானத்தை இந்தியா தாக்காது என்று அவர் அறிவித்தார்.

"எந்த வெளிநாட்டு விமானமாவது தனது மக்களை அங்கிருந்து கொண்டு செல்ல விரும்பினால் அவைகள் அனுமதிக்கப்படும" என்றார் அவர்.

ஆனால் அவைகள், 'டாக்கா செல்வதற்கு முன்னும் — திரும்பும்போதும் கல்கத்தாவில் இறங்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது' என்றும் அவர் தெரிவிததார்.

பூட்டோ மிரட்டல்

"இந்தியா — பாகிஸ்தான் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர், வெகு விரைவில் உலகப் போராக மூண்டுவிடுவது உறுதியாகும்.

"எல்லா நாடுகளும் சேர்ந்து இதற்கு ஒரு முடிவு கட்டாவிட்டால் உலகப் போர் வருவதைத் தடுக்கவே முடியாது.

"இந்தியாவின் தாக்குதலுக்குப் பாகிஸ்தான் இராணுவம் சரியான பதிலடி கொடுக்கும்.

"பாகிஸ்தானில் உள்ள மனிதர்களின் கடைசி சொட்டு இரத்தம் தீரும் வரையில் போர் தொடர்ந்து நடைபெறும்; பாகிஸ்தானே முழுவதுமாக அழிந்துபோனாலும் போர் மட்டும் தொடர்ந்து நடக்கும்"

என்று பாகிஸ்தான் துணைத் தலைமையமைச்சராக அறிவிக்கப்பட்டிருக்கும் பூட்டோ, ஈரான் நாட்டில் கூறியிருக்கிறார்.